**மது வரி வெகுமதி நிதியம் 2013**

---

மது வரி வெகுமதி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1912 இன் 8 ஆம் இலக்க மது வரி கட்டளைச் சட்டத்தின் 58 ஏ பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 1994 மார்ச் 4 ஆம் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் 1(iii) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப் படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மது வரி வெகுமதி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பனாதரகம பயிற்சி பாடசாலைக் கட்டிட நிர்மாணத்திற்காக மீளாய்வாண்டின் போது நிதியத்திலிருந்து ரூபா 47,134,000 தொகை வடமேல் மாகாண சபைக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 7,939,265 ஆக இருந்தது. மாகாண சபை செலவு செய்த தொகையை நடைமுறை வேலையாகவும் (முடிவுறா வேலை) எஞ்சிய தொகை முற்பணக் கொடுப்பனவுகளாகவும் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாமல் முழுத் தொகையையும் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 5,880 தேறிய பெறுமதியான வாகனமொன்று மீளாய்வாண்டின் போது ரூபா 1,428,000 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், விற்பனையிலான இலாபத்தைக் கருத்திற் கொள்ளாமல் சொத்தின் தேறிய பெறுமதியை தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. சொத்து விற்பனையால் கிடைத்த முழுத்தொகையையும் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

**2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்ற வற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|
| (அ) சட்டரீதியான ஏற்பாடுகள் | |
| 1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவு | புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் கீழ், அறவிடப்படும் தண்டப் பணத்தில் 25 சதவீதம் வெகுமதிகளாக செலுத்துவதற்கு உரித்தாவதுடன் இதற்காக அதிகார |

சட்டத்தின் 17(ii) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரால் முன்மொழியப்படும் முறையொன்றின் பிரகாரம் மது வரி ஆணையாளர் நாயகத்தினது கட்டுபாட்டின் கீழ் பேணப்படும் வெகுமதி நிதியம் ஒன்று நிறுவப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமல் புகையிலை தண்டப்பணப் பெறுவனவுகள் மற்றும் வெகுமதி களுக்கான கொடுப்பனவு மது வரி நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்

| | |
|---|---|
| நிதிப் பிரமாணம் 756 | ரூபா 70,809,884 தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 வரையில் பௌதீக மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

(இ) திறைசேரி சுற்றறிக்கைகள்

| | |
|---|---|
| (i) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | கணனி, கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப்பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. |
| (ii) 1978 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | மதுவரி வெகுமதி நிதியத்திலிருந்து கொள்வனவு கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 44,957,705 தொகையான தேறிய மிகை ஏற்பட்டிருந்ததுடன் இதற்கு ஒப்பான முன்னைய ஆண்டின் தேறிய மிகை ரூபா 19,769,754 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 25,187,951 தொகையான அதிகரிப்பினைக் காட்டியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது நிதியத்தின் ஒட்டு மொத்த கட்டணப் பெறுவனவுகள் ரூபா 28,180,492 அளவினால் அல்லது 27 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை மிகையின் அதிகரிப்பிற்கு அடிப்படையாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டிற்குரித்தாக 6,420 மதுவரி தொழில்நுட்ப குற்ற சுற்றிவளைப்புக்கள் மூலம் ரூபா 129,143,113 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டின் போது 4,793 மதுவரி தொழில்நுட்ப குற்ற சுற்றிவளைப்புக்கள் மூலம் ரூபா 99,161,671 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய

ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது மீளாய்வாண்டில் தொழில்நுட்ப குற்ற சுற்றிவளைப்புகளிலிருந்தான வருமானம் ரூபா 29,981,442 தொகை அல்லது 30 சதவீதமான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

1994 மார்ச் 04 ஆம் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் விளையாட்டு, களியாட்டம் மற்றும் நலன்புரி வேலைகளுக்கு ரூபா 50,000 உம், துணிச்சலான செயற்பாடுகள் அல்லது விசேட ஏற்றுக்கொள்ளல்கள் செயற்பாடுகளுக்காக ரூபா 200,000 உம் மீளாய்வாண்டில் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட அவ்வாறான செயற்பாடுகளுக்காக வெகுமதி நிதியத்திலிருந்து செலுத்துவதற்கு நடவடிக்க எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 சொத்து முகாமைத்துவம்

நிலையான சொத்துக்களுக்காக வருடாந்தம் பெறுமானத்தேய்வு செய்யப்படும் தொகைக்கு சமமான தொகையொன்று திறைசேரியின் 6000/0000/00/0008/0051/000 ஆம் இலக்க பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 5,992,438 தொகையான நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் போது அப்பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்தைப் பயன்படுத்தாமல் மது வரி வெகுமதி நிதியத்திலிருந்து மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 5.3 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பனாதரகம பயிற்சி பாடசாலை விடுதிக் கட்டிடம் மற்றும் கணனிக் கட்டிட நிர்மாணத்திற்காக மது வரி நிதியத்திலிருந்து வடமேல் மாகாண சபைக்கு மீளாய்வாண்டின் போது செலுத்தபட்டிருந்த தொகை முறையே ரூபா 37,940,000 மற்றும் 9,194,000 ஆக இருந்ததுடன், நிர்மாணத்திற்காக செலவிடப்பட்டதன் பின்னர் எஞ்சியிருந்த ரூபா 5,037,226 தொகையை மீளப் பெற்றுக்கொள்வதற்கு 2013 திசெம்பர் 31 ஆம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 முகாமைத்துவ பலவீனங்கள்

1994 மார்ச் 04 ஆம் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ள ''மது வரி வெகுமதி'' நிதியத்திலிருந்து மது வரி உத்தியோகத்தர்கள், தகவல் வழங்குவோர் மற்றும் வேறு நபர்களுக்கு வெகுமதி வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட எழுத்துமூல முறைமையொன்று 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதியத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது மது வரி ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் கீழான வெகுமதி நிதியம் தாபிக்கப்படுதல்
(இ) சொத்துக் கட்டுப்பாடு